57

வளரும் நூலக இயக்கம்

C

221.21191'N85
N85
145345

2210
90

57

வளரும் நூலக இயக்கம்

மாவட்ட நூலக அலுவலர்
பெரியார்-638001

வளரும் நூலக இயக்கம்

பெரியார் மாவட்ட நூலக ஆணைக்குழு

தாராபுரம் கிளை நூலக கட்டிடத் திறப்பு விழா

சிறப்பு மலர்

9-6-1985

தமிழ் நாடு அரசு பொது நூலகத் துறை

பெரியார் மாவட்ட நூலக ஆணைக் குழு

தாராபுரம் கிளை நூலகக் கட்டிடத் திறப்புவிழா அழைப்பிதழ்

நிகழ்ச்சிநிரல்

9-6-1985	தாராபுரம்	மாலை 6.00 மணி

தமிழ்த் தாய் வாழ்த்து

வரவேற்புரை : **திரு கா: அன்சாரி பெய்க்.** பி.ஏ., பி.ஈ., எம்.பி.ஏ., எப்.ஐ.ஈ., எம்ஐஎஸ்டிஈ சி. இன்சினீரிங் இயக்குநர், தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை.

அறிக்கை வாசித்தல் : **திரு. டி. ஆர். வரதன்** பி.ஈ.,
கண்காணிப்பு பொறியாளர், தொழில் நுட்பக் கல்வி துறை,
தமிழ் நாடு அரசு.

தலைமையுரை : மாண்புமிகு
சு. முத்துசாமி எம்,ஏ.
போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறைஅமைச்சர், தமிழ் நாடு அரசு.

நூலகக் கட்டிடத் திறப்பு சிறப்புரை : மாண்புமிகு
செ. அரங்கநாயகம்
எம். ஏ, பி எல்., பி. டி., கல்வி அமைச்சர், தமிழ் நாடு அரசு.

வாழ்த்துரை : **திரு. இரா. அண்ணா நம்பி,**
நாடாளுமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி.

திரு. அ. சேனாபதிக் கவுண்டர்,
நாடாளுமன்ற உறுப்பினர், பழனி.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்,
சட்டமன்ற உறுப்பினர், கோபி.

திரு. அ. பெரியசாமி,
சட்டமன்ற உறுப்பினர், தாராபுரம்.

நன்றியுரை : **திரு இரா. பழனிசாமி,** பி. ஏ, பி. எல், எஸ்
மாவட்ட நூலக அலுவலர், பெரியார்.

நாட்டுப்பண்

அனைவரும் வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இரா. பழனிசாமி,
பி. ஏ., பி. எல், எஸ்.,
மாவட்ட நூலக அலுவலர், பெரியார்,

கா. அன்சாரி பெய்க்,
பி. ஏ., பி, ஈ., எம், பி. ஏ, எப். ஐ. ஈ, எம்ஐஎஸ்டிஈ சி.
இன்ஜினீரிங், பொது நூலக இயக்குநர், தமிழ்நாடுஅரசு.

145345
-600 008
Ձ21:2119'N85
N85

57 2210/40

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் **எம். ஜி. ஆர்.** அவர்கள்

மாண்புமிகு செ. அரங்கநாயகம், எம்.ஏ..பி.எல்.,பி.டி.,
கல்வி அமைச்சர்.

மாண்புமிகு சு. முத்துசாமி எம். ஏ.,
போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்.

தாராபுரம் கிளை நூலக புதிய கட்டிடம்

பெரியார் மாவட்டம்

தந்தை பெரியார் அவர்கள் பெயரால் ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்ட 16 வது மாவட்டம் கோவை மாவட்டத்திலிருந்து பிரிந்து 17-9-79 முதல் செயல்படும் புதிய மாவட்டமாகும். இம்மாவட்டத்தின் எல்லைகளாக கர்நாடகம், கோவை, நீலகிரி, திருச்சி, மதுரை, சேலம் மாவட்டங்கள் அமைந்துள்ளன. 8170 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இம்மாவட்டம் 20,68,462 மக்களைப் பெற்றுள்ளது. இம்மாவட்டம் 3996 குக் கிராமங்களையும் 510 வருவாய், கிராமங்களையும், 343 ஊராட்சிகளையும், 60 பேரூராட்சிகளையும், 20 ஊராட்சி ஒன்றியங்களையும் 5 நகராட்சிகளையும், 1 நகரியத்தையும் கொண்டுள்ளது.

இம்மாவட்டத்தை வளப்படுத்த உறுதுணையாக பவானி சாகர், உப்பாறு, கொரட்டுப்பள்ளம், கொடிவேரி, பவானி, கூடுதுறை, காலிங்கராயன், ஜோடர்பாளையம் அணைகள் உள்ளன. இம்மாவட்டத்தில் சென்னிமலை, கொடுமுடி, பண்ணாரி, பாரியூர், பவானி, சிவன்மலை ஆகிய ஊர்களில் சிறப்பு மிக்க ஆலயங்கள் உள்ளன.

சுற்றுலா இடங்களாக பவானிசாகர் அணை, கொடிவேரிஅணை, ஆசனூர்மலை, தலைமலை, பர்கூர்மலைகள், உள்ளன. இம்மாவட்டத்தில் விவசாயத் தொழில் மட்டுமல்லாமல், கைத்தறி, தோல் பதனிடுதல், பால் உற்பத்தி மஞ்சள், எண்ணெய் விற்பனை முதலிய தொழில்களும் சிறப்படைந்துள்ளன.

பெரியார் மாவட்டத்தில் 60,250 கைத்தறிகள் உள்ளன. மாதம் ரூ. 180 லட்சம் மதிப்புள்ள துணிகள் தயார் செய்யப்படுகின்றன. உற்பத்தி செய்யப் படும் கைத்தறி ரகங்களில், ஜமக்காளங்கள், படுக்கை விரிப்பு, தரைவிரிப்பு, துண்டுகள், தரமானவைகளாகும், மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. பாவனி ஜமக்காளத்திற்கும், சென்னிமலை போர்வைக்கும் பெயர் பெற்றதாகும். ஈரோட்டில் பாத்திக் மற்றும் ஸ்கின்பிரிண்டிங் முறையில் கைலிகளும் சேலைகளும் அதிக அளவில் தயாரிக்கப் படுகின்றன. விசைத்தறி கூடங்கள் சிவகிரியிலும் தாராபுரத்திலும் உள்ளன.

ஆப்பகூடலில் சர்க்கரை ஆலையும், சித்தோட்டில் பால்பண்ணை, ஆகியவைகள் உள்ளன. நெல் பயிரைப்பொறுத்த மட்டில் ஒரு ஹெக்டேர் மகசூலில் பெரியார் மாவட்டம் தமிழகத்தில் முதலிடம் வகிக்கிறது. பல்வேறு வளர்ச்சிப் பணிகளும் நல்வர்ழ்வுத் திட்டங்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இம்மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 1,84,000 குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலம் 75,350 லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. இம்மாவட்டத்திலுள்ள ஜீவா போக்குவரத்து கழகம் 273 வழித் தடங்களில் செயல்படுகின்றன.

தாராபுரம் நகர்

நம் நாட்டு இதிகாசங்களில் அழியாக் காவியங்களுள் ஒன்றான மகா பாரதத்தின் வீர அரசர்களான தருமன், பீமன், அர்ச்சுணன், நகுலன், சகாதேவன் ஆகிய பஞ்ச பாண்டவர்களுக்கே அடைக்கலம் அளித்து பகைவரிடம் இருந்து காப்பாற்றி ஆதரித்து ஆட்சி பீடம் அளித்தது தாராபுரம். அப்போது இந்நகரின் பெயர் விராடபுரம். இதை ஆண்ட மன்னன் விராடராசன்.

இந்நகரை அழகான அமராவதி ஆறு வளமாக்குகிறது. வானழாவிய கோட்டை நகர், நன்காடு எல்லையில் இன்றும் சான்று பகர்கின்றன. இங்கு தில்லாபுரி அம்மன்கோவில் அருகில் உள்ள கல்வெட்டில் ''கொங்குவஞ்சி'' ,'விலாடபுரம்'' ''ராஜபுரம்'' என்ற பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. விலாடபுரம் என்பது விராடபுரம் என்றே அறிய வேண்டும். இந்நகரம் சேரர் ஆட்சியிலும் கொங்கு சோழர் ஆட்சியிலும், பாண்டியர் ஆட்சியிலும், விஜயநகர ஆட்சியிலும், மைசூர் மன்னர் ஆட்சியிலும், 16ம் நூற்றாண்டில்சிறந்த போர் வீரனான திப்புவின் ஆட்சியிலும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிலை எய்தி, பின்பு ஆங்கிலேய ஆட்சி யாளரின் கேந்திர இடமாகவும் விளங்கியது.

அன்றைய சேலம், கோவை, நீலகிரி மாவட்டங்கள் முழுவதற்கும் மாவட்டத் தலைநகராக நீண்டகாலம் இத்தாரைப் பெருநகர் விளங்கியது. இந் நகரில் பழமையான கோவில்களும், மசூதிகளும், கிருஸ்துவ தேவாலயங்களும் இன்றும் உள்ளன. தாராபுரம் நகரின் தற்போதைய மக்கள் தொகை 42228 ஆகும்.

இவ்வாறான பழம்பெருமையும், வரலாற்றுச்சிறப்பு மிக்க இந்நகரில் 1954ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ம் நாள் 1000 நூல்களைக் கொண்ட பொது நூலகம் ஒன்று கோவை மாவட்ட நூலக ஆணைக்குழுவால் ஏற்படுத்தப்பட்டது. காலப் போக்கில் வலிவோடும், பொலிவோடும் வளர்ச்சி பெற்று 1982ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து 20,000 நூல்களைக் கொண்ட முதல் நிலை நூலகமாக வடிவெடுத்தது, தாரைவாழ் மக்களுக்கு சிறப்பான அறிவுப் பணியை நல்கிவருகிறது. இது இம்மாவட்டத்திலேயே முதன் முதலாக அமைந்த-முதல் நிலை நூலகமாகும். பெரியார் மாவட்டத்திலேயே முதல் முதல் நிலை நூலகத்தை இந்நகர் பெற்றதற்கு முழு முதற்காரணம் நிர்வாக ஊக்குவிப்பும், நூலகப் ப்ணியா ளர்களின் அயராத உழைப்பும், பொது மக்களின் ஆதரவும், நூலக வளர்ச்சிக் குழுவின் பேணுதலுமாகும்.

மகளிர்க்கான மூன்று சக்கர மிதிவண்டி இயங்கு நூலகம் ஒன்று 1982ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6ம் நாள் பொது மக்கள் நன்கொடையால் துவங்கப்பட்டு வீடுதோறும் நூல் வழங்கும் திட்டத்தின் கீழ் தொடர்ந்து சிறப்புப் பணியாற்றி வருகிறது.

31-10-81 அன்று பொது மக்களடங்கிய நூலக வளர்ச்சிக்குழு அமைக்கப்பட்டு அக்குழுவினரின் சீரான முயற்சியால் தற்போது புதிய நூலகக் கட்டிடம் எழுந்துள்ள இடம் வருவாய் துறையினரால் ஒதுக்கீடு செய்யப்பட்டது பின் இந்நூலகம் முதல்நிலை நூலகமாக உறுப்பெற்றதற்கும் எல்லா வசதிகளையும் கொண்ட புதிய நூலகக் கட்டிடம் தோன்றியதற்கும் அவ்வக்காலங்களில் பணி யாற்றிய மாவட்ட நூலக அலுவலர் பெருமக்களின் நிர்வாகச் சிறப்பையே பறைசாற்றும்.

முன்னால் மாவட்ட நூலக அலுவலர் திருமதி சுசீலா கணேசன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களால் துவக்கப்பட்டு, அடுத்து திருமதி எஸ் பத்மாவதி, பி. ஏ., பி எல். எஸ். அவர்களால் வளர்க்கப்பட்டு இன்றைய மாவட்ட நூலக அலுவலர் திரு இரா பழனிசாமி, பி. ஏ., பி. எல். எஸ்., அவர் களால் உயர்த்தப்பட்டு இப்புதிய நூலகக் கட்டிடம் நிறைவு பெற்றது இந்த நூலகக் கட்டிடத்தை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, எம். ஏ , அவர்கள் தலைமையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம், எம்..ஏ., பி. எல்., பி டி , அவர்கள் 9-6-85 அன்று திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

ரூ 3.7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்நூலகக் கட்டிடம், பழமையான அரசு மேல் நிலைப்பள்ளி அருகிலும், அலுவலர்கள், அலுவலர் மன்றங்கள் அமைந்துள்ள இடங்களுக்கு மையத்திலும் பொதுமக்கள் எளிதில் வந்து செல்லக் கூடிய இடத்திலும் அமைந்து இயங்குவது சாலச்சிறந்ததாகும்

கோ. நாச்சிமுத்து. பி. ஏ. பி. எல். எஸ்.,
கிளை நூலகம்
தாராபுரம்.

பெரியார் மாவட்டத்தில் பொது நூலகப்பணி

1948 சென்னை பொது நூலகச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட கோவை மாவட்ட நூலக ஆணைக்குழுவிலிருந்து அரசு ஆணை பல்வகை எண். 754 கல்வி 24-4-1980ன் படி பிரிக்கப்பட்டு 1-6-80ம் நாள் முதல் பெரியார் மாவட்ட நூலக ஆணைக்குழுவாக செயல்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தற்போது ஒரு மைய நூலகமும், ஓர் இயங்கு நூலகமும், 99 கிளை நூலகங்களும் உள்ளன. இவற்றில் நூலக நிதித் திட்டத்தின் கீழ் 63 நூலகங்களும், 5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் 38 நூலகங்களும் செயல்படுகின்றன.

மேற்கண்ட நூலகங்களைப் பல்வேறு நிலையிலுள்ள 142 நூலகப் பணியாளர்கள் மாவட்ட நூலக அலுவலரின் நிர்வாகத்தில் செயல்படுகின்றனர். அவர்களின் விபரம் வருமாறு

தொழில்நுட்பப் பணியாளர்கள்

முதல்நிலை நூலகர்	1
இரண்டாம் நிலை நூலகர்கள்	7
மூன்றாம் நிலை நூலகர்கள்	97
ஓட்டுநர்	1
பதிவரை எழுத்தர்கள்	3
அலுவலக உதவியாளர்கள்	25
இரவு காவலர்கள்	2

அமைச்சுப் பணியாளர்கள்

தலைமை எழுத்தர்	1
இளநிலை உதவியாளர்கள்	4
தட்டச்சர்	1

மாவட்டங்களில் நூலகப் பணியாற்றுவதற்குத் தேவையான நிதி வசதிக்கு பொது நூலகச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலித்து வரும் வீட்டு வரி அல்லது சொத்துவரியின் மேல் ரூ. 100க்கு 5 பைசா வீதம் மேல் வரியாக நூலகவரி வசூலிக்கப்படுகிறது. அதற்கு இணையாக தமிழ் நாடு அரசு இணை மானியம் வழங்குகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் நூலகவரி வசூல் விபரம் கீழ்வருமாறு.

	1981-82	1982-83	1983-84	1984-85
நூலகவரி	5,18,837.50	5,29,941.73	3,92,232.02	5,30,484.47

இம்மாவட்ட நூலக ஆணைக்குழுவில் கடந்த நான்கு ஆண்டுகளாக வரவு, செலவு, விபரம் பின்வருமாறு:-

	1981-82	1982-83	1983-84
வரவு	16,35,054.25	18,94,887.72	18.76,487.65 1984-85 17,62,020.27.
செலவு	16,47,424.15	21,78,833.50	18,84,531.05 1984-85 17,60,457,17

கடந்த நான்கு ஆண்டுகளில் இம்மாவட்டத்திலுள்ள நூலகங்களின் பயன்பாடு விபரம் பின்வருமாறு:-

ஆண்டு	நூலகங்கள்	நூலிருப்பு	பயன்படுத்தியோர்
1981-82	100	5,06,348	12,61,673
1982-83	100	6,67,662	15,21,672
1983-84	100	7,09,148	14,58,391
1984-85	101	7,50,915	15,02501

	உறுப்பினர்	நூல்வழங்கல்	நூல்வாசிப்பு	பயன்பட்டமொத்த நூல்கள்
1981-82	48,209	2,37,754	2,06,802	4,44,556
1982-83	60,653	6,44,807	34,025	6,78 832
1983-84	66,215	6,85,115	2,74,029	9,59,144
1984-85	70,220	5,90,766	2,58,619	8,49,385

மாவட்ட மைய நூலகம் பவானி, தாராபுரம் கிளை நுலகங்கள் காலை 8,00 மணிமுதல் இரவு 8.00மணி வரை நாளொன்றுக்கு 12 மணி நேரம் செயல் படுகிறது கிளை நூலகங்கள் காலை 8.00 மணி முதல்11.00 மணி வரையும் மாலை மின்வசதியற்ற நூலகங்கள் 3.00மணி முதல் 6.30 மணி வரையும் மின் வசதியுள்ள நூலகங்கள் 4.00 மணி முதல் 7.30 மணி வரையும், நாளொன்றுக்கு $6\frac{1}{2}$ மணி நேரம் செயல்படுகிறது. நூலகத்திலே படிப்பது இலவசம். வீட்டிற்கு நூல்களை எடுத்துச் சென்று படிக்க விரும்புவேர் முன் பணம் ரூ.5.10,15 செலுத்தி (முறையே 1,2,3 நூல்கள்) எடுத்துச்செல்லலாம் எத்தகைய சந்தாவும் வசூலிக்கப் படுவதில்லை நிர்வாகங்களுக்கு நிர்வாக உறுப்பினர் அடிப்படையில் நூல்கள் வழங்கப்படுகின்றன.

வீடு தேடி நூல் வழங்கும் திட்டம்,

மகளிர்க்கு வீடு தேடி நூல் வழங்கும் திட்டத்தின் கீழ் ஓர் மூன்று சக்கரமிதிவண்டி தாராபுரத்தில் செயல்படுகிறது. இந்த வண்டி அன்பளிப்பாக பெறப்பட்டதாகும் அதில் ஓர் அலுவலக உதவியாளர் பணியாற்றுகிருர். இந் நூலகம் நாளொன்றுக்கு $6\frac{1}{2}$ மணிநேரம் செயல்படுகிறது.

ஊரக நூல் வழங்கும் திட்டம்.

சேரன் போக்குவரத்துக் கழகத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பேருந்து மூலம் 5,000 மக்களுக்கு குறைவான ஊர்களுக்கு உள்ளூர் ஆசிரியர்கள் மூலம் நூல் வழங்கும் திட்டம் செயல்படுகிறது. இந் நூலகம் நாளொன்றுக்கு $6\frac{1}{2}$ மணி நேரம் செயல்படுகிறது.

கட்டிட வசதி.

இம்மாவட்டத்திலுள்ள 101 நூலகங்களில் 2 கிளை நூலகங்கள். சொந்தக் கட்டிடத்தில் இயங்குகின்றன. 35 கிளை நூலகங்கள் வாடகையில்லாக் கட்டிடங்களிலும், 65 கிளை நூலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன.

புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு தற்போது தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மாவட்ட மைய நூலகம் கட்ட ஈரோடு நகர் மன்றத்திலிருந்து நிலம் ரூ 2,45,210.20 விலைக்கு வாங்கப்பட்டுள்ளது. நிலம் உரிமை மாற்றம் கடிதத் தொடர்பில் உள்ளது. இந்நூலகம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களால் 28-11-82ல் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்நூலகம் ரூ. 22.5 லட்சமதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது. இந்நூலகம் கட்ட ரூ. 5 லட்சம் சிறப்பு மான்யம் தமிழ் நாடு அரசு வழங்கியுள்ளது.

குருமந்நூர், ஆலாம்பாளையம் ஊர்களில் நிலம் தனியாரிடம் இலவசமாகப் பெறப்பட்டு நூலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு மதிப்பீடும் வரை படமும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத் துறையிலுள்ள பணியாளர்கள் ஆர்வத்தோடு முயற்சித்தும் தக்கமையப் பகுதிகளில் காலி மனைகள் கிடைக்காததால் இப் பணி இதுவரை நிறைவேற்றப்படாமலுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்துழைப்புடன் விரைவில் காலி மனைகள் பெற்று நூலகங்கள் கட்டும் பணிகள் நிறைவேறுமென நம்புகிறேன்.

தாராபுரத்தில் கிளை நூலகக் கட்டிடம் ரூ. 3.7 லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதற்கான காலிமனை வருவாய்த் துறையிடமிருந்து இலவசமாகப் பெறப்பட்டதாகும். இவ்வூரிலுள்ள நூலக வளர்ச்சிக் குழுவின் முயற்சி இந்த காலி மனை பெற பெரிதும் உதவியாக இருந்தது.

நூலகங்களுக்கு வரும் புதிய நூல்கள் வாசகர்கள் பார்வைக்கு வைத்து அறிமுகப் படுத்தப்படுகின்றன இது படிக்கும் பழக்கத்தை அதிகரிக்கவும், நூலக இயக்கம் வளரவும் பேருதவியாக உள்ளன

1981ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 5000க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 60 ரெவின்யூ கிராமங்களில் நூலகங்கள் திறக்க வேண்டியுள்ளன. கட்டிடங்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் இலவசமாககொடுக்க முன்வரும் ஊர்களில் நூலகங்கள் திறக்க முன்னுரிமை வழங்கப்படும் பொது மக்கள் தரமான நூல்களை அன்பளிப்பாக நூலகங்களுக்கு தர முன் வந்ததால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இரா. பழனிசாமி,
மாவட்ட நூலக அலுவலர்,
பெரியார் மாவட்டம்,
ஈரோடு.

தமிழ் நாட்டில் பொது நூலக வளர்ச்சி

''புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்''

என்று நம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்று கண்ட கனவினை நனவாக்குவதே போல் இன்று தமிழ் நாட்டில் பேரூர்கள், சிற்றூர்கள், மட்டுமல்லாது பட்டி, தொட்டிகளிலெல்லாம் பொது நூலகங்கள் ஏற்பட்டு, மக்கள் அனைவரும் கல்வி அறிவு பெற்று அன்பு நெறி காண்பதற்கும், அதன் வழியாக விரிந்த மனமும் பரந்த உள்ளமும் பெற்று தனி மனித தத்துவத்தைப் போக்கி மக்கள் அனைவரும் ஒன்றே என்ற உயர்ந்த எண்ணங்களை உருவாக்கும் பயனுள்ள அறிவாலயங்களாகத்திகழ்ந்து வருகின்றன.

இந்திய துணைக் கண்டத்திலேயே என்றும் எந்த நல்ல காரியத்திலும் முன்னிற்கும் தமிழகம் பொது நூலக இயக்கத்திலும் முன்னோடியாகத் திகழ்வதில் வியப்பொன்றுமில்லை.

நாட்டு விடுதலை

பல நூற்றாண்டுகளாக அடிமைத்தளையில் அந்நியராட்சியில் சிக்குண்டிருந்த நம் இந்திய நாடு 1947 ஆகஸ்டு 15ம் நாள் விடுதலை பெற்றது. எனவே, மக்கள் அரசியல் உரிமை பெற்றனர். மக்களுக்காக, மக்களே, மக்களால் நடத்தும் மக்களாட்சி மலர்ந்தது. அவ்வாறு தோன்றிய மக்களாட்சி சிறப்பாக, வெற்றிகரமாக நடக்க, நாட்டு மக்களனைவரும் கல்வி அறிவு பெற்றவர்களாக எதையும் பகுத்துணர்ந்து நல்லவை கெட்டவை அறிந்து செயல் படக்கூடிய வல்லவர்களாகத் திகழ வேண்டும். இதன் காரணமாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் 45 ஆம் பிரிவில் கட்டாயக் கல்வித் திட்டம் இடம் பெற்றது. இதனைச் செயல் படுத்தும் வகையில், மாநில, மத்திய அரசுகள் கல்வித் திட்டங்கள் பல தீட்டின. அதன் விளைவாக, வயது வந்த குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்ந்து கட்டாயக் கல்விபெறவும், அவ்வாறு பள்ளியில் சேர்ந்து படிக்கமுடியாதவர்களுக்கு முதியோர் கல்வி, முறை சாராக் கல்வி போன்ற பல்வேறு திட்டங்கள் உருவாகின. இவைகளைத் தொடர்ந்து நாட்டு மக்கள் அனைவரும் தொடர் கல்வி பெறவும் பெற்ற கல்வியை மறவாது போற்றிப் பாதுகாத்திடவும் உறுதுணையாகத் திகழும் பொது நூலகப் பணியின் தேவை உணரப்பட்டது. எனவே, அப்பணி வளர, சிறக்க வேண்டிய முயற்சிகள் தொடர்ந்தன.

நூலகச் சட்டம்

இத்தகைய நூலகப் பணி, முறையாக அமைந்து தொடர்ந்து நடக்கவும், திறம்படச் செயல்படவும், இப்பணிக்குச் சட்ட உருவம் கொடுக்கப் பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடு தான், 1948 ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தினை இயற்றியது. 1950ம் ஆண்டு ஏப்ரல் முதல் அமுலாக்கப்பட்ட இச்சட்டத்தின் முதல்கட்டமாக, அதுவரை தனித்து இயங்கி வந்த கன்னிமாரா பொது நூலகம் மாநில மைய நூலகமாக அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலுள்ள நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றிலும் மாவட்ட நூலக ஆணைக் குழு நிறுவப்பட்டு, மாவட்டமைய நூலகங்களும், கிளை நூலகங்களும் தொடங்கப்பட்டன.

221.21191'N85 145345
N85

ஐந்தாண்டு திட்ட நூலகங்கள் தமிழக அரசு தீட்டிய மாநில ஐந்தாண்டுத் திட்டங்களில் கிராம மக்களுக்கும் நூலகப் பயன் கிடைக்கும் வகையில் பல கிராமங்களில் இது வரை 55 நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு அரசு மானியத்துடன் சிறப்புடன் நடந்து வருகின்றன. 1871 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி 5,000 மும் அதற்கு மேலும் மக்கள் கொண்ட கிராமங்களிலெல்லாம் நூலகங்கள் திறக்கப்பட்டு விட்டன. 1981 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி 5,000க்கு மேல் மக்கள் வாழும் இடங்கள் சிலவற்றில் நூலகங்கள் திறக்கப்பட வேண்டியுள்ளது. இவைகளில் 40 இடங்களுக்கு மேலாக 6வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் நூலகங்கள் திறக்கப்பட்டு விட்டது. 1984-85 ஆண்டிலும் 7வது திட்டக் காலத்திலும் எஞ்சியுள்ள எல்லா இடங்களிலும் நூலகங்கள் திறப்பதற்கான முயற்சிகள் தொடரப்பட்டுள்ளன.

தற்போதிருக்கும், நூலகப் பணி மையங்களின் விவரம் வருமாறு:-

மாநில மைய நூலகம்	1
மாவட்ட மைய நூலகம்	16
கிளை நூலகங்கள்	1484
மொத்தம்	1501

நூலகத் துறை

1950 ஏப்ரல் முதல் அமுல்படுத்தப்பட்ட பொது நூலகச் சட்டத்தினை, பொதுக் கல்வி இயக்குநரவர்களே நூலகத் துறையினையும் மாநில அளவில் நிர்வகித்து வந்தார்கள். மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர்கள் நூலகப் பணிப் பொறுப்பினையும் ஏற்று நடத்தி வந்தனர்.

தனித் துறை

மக்கள் தொகை பெருகப் பெருக, கல்வி அறிவு வளர வளர மக்களிடையே நூல்களைப் படிக்கும் ஆர்வமும், பழக்கமும் அதிகரித்தது. எனவே, நூலகப் பணியும் வேகமாக வளர்ந்தது. அதனால், திட்டமிடுதலும். செயல்முறைகளும் கண்காணிப்பும் அதிக அளவு தேவைப்பட்டன. இதனை உணர்ந்த தமிழ்நாடு அரசு 1972-ம் ஆண்டில் நூலகங்களுக்கென்று தனித்துறை ஒன்றினை உருவாக்கி நூலகத்துறை சார்ந்த ஒருவரை இயக்குநராகவும் நியமித்தது. இதனைத் தொடர்ந்து மாவட்ட அளவிலும் வளர்ந்து வரும் நூலகப்பணிகளை ஒருமுகப்படுத்தி திறப்படச் செயல்படுத்துவதற்காக 1977ம் ஆண்டில் நூலகப் பயிற்சியும், அனுபவமும் பெற்ற நூலகர்களை மாவட்ட நூலக அலுவலர்களாக அரசு நியமித்தது. பின்னர், நூலக ஆய்வாளர், இருப்பு தணிக்கையாளர், கணக்காளர் போன்ற புதிய பதவிகளைத் தோற்றுவித்து நூலர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பும் அளிக்கப்பட்டது,

மேலும் மாநிலத்திலுள்ள நூலகங்களை எல்லாம் நான்கு தரங்களாகப் பிரித்து அதற்கேற்பப் பணியாளர்களைச் சீரமைப்பதற்கான நடவடிக்கையும், அரசினரால் எடுக்கப்பட்டது இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் 1982 எப்ரல் முதல் நூலக அலுவலர் அனைவரையும், அரசு ஊழியர்களாக்கி ஊழியர்களது நீண்ட கால கோரிக்கையையும் நிறைவேற்றி வைத்துள்ளது.

நூலகப் பணி

பொது நூலகச் சட்டம் அமுல் படுத்தப் பட்டு வரும் கடந்த 34 ஆண்டு களாக நூலகத் துறை மக்களுக்கு பணியாற்றிய புள்ளி விவரங்கள், வாங்கப் பட்டுள்ள நூல்கள், வாசகர்களின் எண்ணிக்கை, உறுப்பினர்கள் பயன் படுத்திய நூல்கள் ஆகியவைகளின் புள்ளி விவரங்கள் இணைப்பு 1ல் கொடுக்கப் பட்டுள்ளது.

நூலக நிதி

இவ்வாறு தோன்றிய நூலகப் பணியை நாட்டு மக்களிடையே தொடர்ந்து வளர்க்கும் பொருட்டு தேவைப்படும் நிதியினை உருவாக்குவதற்கு நூலகச் சட்டத்திலேயே வழி வகை செய்யப்பட்டுள்ளது எவ்வாறெனில், மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள். பேரூராட்சிகள் வசூலிக்கும் சொத்து வரி அல்லது வீட்டுவரியின் மீது மேல் வரியாக (Surcharge) நூலக வரியை (Library cess) வசூலித்து அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழுக்களிடம் செலுத்துகின்றது.

இவ்வாறு மக்களிடமிருந்து வசூலிக்கப் படும் நூலக வரிக்குச் சமமான தொகையினை இணை மானியமாக (Matching grant) மாநில அரசு அந்தந்த மாவட்ட நூலகநிதியில் (சென்னை நீங்கலாக) சேர்ந்து விடுகிறது.

இவ்விருவகை வருமானங்களுடன் இதர வருமானங்களும் சேர்ந்து ஒவ்வொரு மாவட்ட நூலகக் குழுவின் நூலக நிதியாக (Library Fund) உருவாகிறது. இத்தோடு ஐந்தாண்டுத் திட்ட அடிப்படையில் கிராமப் பகுதி மக்களுக்கு நூலகப் பணியை நீட்டிக்கும் வகைகள், நிறுவப்படும் நூலகங்களுக்கான நிர்வகிப்பு மானியம் (Maintenance Grant) முழுவதையும் அரசே தருகின்றது.

இவ்வாறு மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் கடந்த ஐந்தாண்டுகளில் நூலக வரியாக வசூலித்த நிதி விபரம் இணைப்பு 2-ல் காணலாம். அதே போல் 1983-84 ஆண்டிற்கு அரசு ஒதுக்கீடு செய்த நிதி விபரத்தினை இணைப்பு 3ல் காணலாம்.

நூல்கள் சேர்த்தல்

1972-73 நிதி ஆண்டுவரை ஒவ்வொரு நூலக ஆணைக்குழுவும் தங்களுக்குத் தேவையான நூல்கள் மற்றும் நாள், வார, மாத இதழ்களையெல்லாம் நூலக நிதியிலிருந்து அவர்களே நேரடியாக வாங்கிவந்தனர்.

வளர்ந்து வரும் பணியாளர் ஊதிய உயர்வாலும், நூலகக் கட்டிட வாடகை ஏற்றத்தாலும் நூல்கள் மற்றும் நாள், வார, மாதஏடுகள் ஆகியவைகளின் விலை ஏற்றத்தாலும், உருவாகிய நிதி பற்றாக்குறை, காரணமாக சில மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூல்களை வாங்க முடியவில்லை. எனவே, அரசு வழங்கும் இணை மானியத்தில் 25 விழுக்காட்டினை நூல்கள் வடிவில் நூலகங்களுக்குக் கொடுக்க அரசு முடிவு செய்தது அதன் விளைவாக 1974-75ஆம் ஆண்டிலிருந்து இணைப்பு 4-ல் கண்ட விபரப்படி நூல்களை அரசே வாங்கி நூலகங்களுக்கு விநியோகித்து வந்தது இத்திட்டம் 21-3-1982 வரை அமுல்படுத்தப்பட்டுவந்தது. இதற்குப் பின்னர் மாவட்ட நூலக ஆணைக்குழு நூலகங்களுக்கு நூல்கள் வாங்க புதியதொரு மாற்றுத்திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. அரசின் பரிசீலனையில் உள்ள இத்திட்டம், கூடிய விரைவில் செயலாக்கப்படுமெனத் தெரிகிறது.

கட்டடங்கள்

ஒவ்வொரு நூலகமும் தனக்கென ஒரு தனி இடம் கொண்டு இயங்கினால் தான் அதன் பணி சிறப்பாக திறமையாக அமையும். தற்போதுள்ள 16 மாவட்ட மைய நூலகங்களில் சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம், கன்னியா குமரி முதலிய பத்து மாவட்ட மைய நூலகங்களுக்குத்தான் சொந்தமான கட்டடங்கள் உள்ளன. இராமநாதபுரம், தருமபுரி, நீலகிரி, பெரியார், புதுக்கோட்டை போன்ற மாவட்டங் களில் அவற்றின் மைய நூலகங்கள், வாடகைக் கட்டிடங்களில் செயல் பட்டு வருகின்றன. இவைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சிகள் விரைவில் நடந்து வருகின்றன. இவை தவிர, பெரும்பாலான கிளை நூலகங்கள் வாடகைக் கட்டிடங்களில்தான் செயலாற்றி வருகின்றன.

மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் நூலகங்களின் தேவைகள் அனைத் தையும் நிறைவேற்றத் தக்க வசதிகள் கொண்ட கட்டடங்கள் கூடிய விரைவில் கட்டப்படும் என்று 29-3-1979 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து முதல் கட்டமாக, சென்னை மாநகரிலுள்ள 150 வட்டங்கள் ஒவ் வொன்றிற்கும், ஒரு கிளை நூலகக் கட்டடமும், 10 வட்டங்களுக்கு ஒரு வட்டார நூலகம் வீதம் 15 வட்டார நூலகக் கட்டடங்களும் கட்டுவதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டு இதுவரை 6 வட்டார நூலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. பாரதிதாசன் சாலையில் திறக்கப்பட்டது 5-வது வட்டார நூலகக் கட்டடமாகும். இதேபோல் இதுவரை 15 கிளை நூலகக் கட்டடங்கள் திறக்கப் பட்டு விட்டன. 9 கிளை நூலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், இன்று 6 கிளை நூலகக் கட்டடங்களுக்கான கால் கோள் விழாவும் நடத் தப்பட இருக்கின்றது.

மேலும் மாநில முழுவதும் அங்காங்குள்ள மாவட்ட மைய, கிளை நூலகங் களுக்குச் சொந்தமான கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது இவற்றில் குறிப்பாக, திருச்சி மாவட்டத்தில் ரூ. 30/- லட்சம் செலவில் மாவட்ட மைய நூலகத் திற்கு பல மாடிக் கட்டிடம் ஒன்று கட்ட 3-10-1980 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர்அவர்களால் கால்கோள் விழா நடத்தப்பட்டு அக் கட்டடமும் நிறைவு பெற்றுள்ளது.

இதே போல் தற்போது மாவட்ட மைய நூலகங்களுக்குச் சொந்தமான கட்டடம் இல்லாத மாவட்டங்களில் 6 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரியார்/ தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கு கட்டடங்கள் கட்ட ரூ. 5/- லட்சம் வீதம் மானியம் வழங்கப்பட்டு கட்டட வேலைகளும்நடந்து வருகின்றன. இதே போன்று இராமநாத புரம், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கும், அரசு மானியம் பெற்று கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் வடக்குக் கோவை நகரில் ஒரு நூலகக் கட்டடமும், அந்நகரின் பெரிய கடை வீதியில் ஒரு நூலகக் கட்டடமும் கட்டப்பட்டு வருகின்றன.

இதேபோன்று மாநிலம் முழுவதும் பல கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் ஆங்காங்குள்ள நகராட்சிகளின் உதவியுடன் இலவசமாக இடம் கிடைத்தால், அரசு மானியம் பெற்றுக் கிளை நூலகக் கட்டடங்கள் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவை தவிர, பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் நன்கொடையாகக் கொடுத்துள்ள காலிமனைகளில் புதியகட்டடங்கள் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் பொது மக்களின் ஆதரவையும், நூலகப் பணியின்பால் அவர்களுக்கு ஈடுபாட்டினை ஏற்படுத்தும் வகையில் ரூ. 50/-ஆயிரத்திற்குக் குறையாது மதிப்புள்ள புதிய கட்டடங்களை நூலகங்களுக்காக கட்டிக் கொடுத்தால் அவர்கள் விரும்பும் மறைந்த ஒருவர்பெயரில் அக்கட்டடங்களுக்குப் பெயரிடப்படும் திட்டமும் உள்ளது.

தனியார் நூலகங்களுக்கு மானியம்

தமிழகத்தில் அரசு நிர்ணயித்துள்ள விதி முறைகளின்படி பொதுமக்களுக்காக பணியாற்றி வரும் தஞ்சை சரபோஜி மகராஜா சரஸ்வதி மகால் நூலகம், சென்னையிலுள்ள மறைமலையடிகள் நூலகம், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூலகம் போன்ற தனியார் நூலகங்களுக்கு சுமார் 1.85 லட்சம் வரை அரசு மானியமாக வழங்கப்படுகிறது

நூலகர்களுக்குப் பயிற்சி

எத்துறையிலும் பயிற்சி பெற்ற அலுவலர்களால் தான் அத்துறை பணிகளைச் சிறப்புடன் ஆற்ற முடியுமென்பது உலக நடை முறையாகும். நூலகத் துறையில் பயிற்சி பெறாமலே பல நூலகர் பணியாற்றி வரும் நிலையை உணர்ந்து அரசினர் பொது நூலகத் துறை இயக்குநரின் கண்காணிப்பில் சென்னை கன்னிமாரா பொது நூலகத்தில் 1966ல் ஒரு பயிற்சி நிலையமும், 1982ல் மதுரையில் இரண்டாவது பயிற்சி நிலையமும் ஆரம்பித்து நடத்தி வருகின்றன. இதுவரை 1077 மூன்றாம் நிலை நூலகர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே பயிற்சி பெற்ற நூலகர்களுக்கு மறு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது.

முடிவுரை

தமிழக மக்கள் அனைவரும் அவரவர்கள் வாழும் இடங்களில் குறைந்த முயற்சியால் மாநில, மாவட்ட மைய நூலகங்கள் மூலமாகவும் கிளை நூலகங்கள் மூலமாகவும் இலவச நூலகப் பணிப் பயன்களை நல்ல முறையில் பெறுவதற்காக தமிழ்நாடு பொது நூலகத்துறை திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது. பொது நூலகப்பணித் திட்டங்களுக்கெல்லாம் தமிழ்நாடு அரசு உற்சாகத்துடன் கொடுத்து வரும் ஆதாரவுக்கும் அரவணைப்பிற்கும் எடுத்துக் காட்டாக, மாண்பு மிகு முதல்வரவர்கள் சென்னை காந்திநகரில் திறந்து வைத்த வட்டார நூலக விழவின் போது நூலக வளர்ச்சிக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும் பொழுது தமிழக அரசே முன்வந்து உதவி செய்யும் என அறிவித்தார். இவ்வாறு தமிழக அரசின் அரவணைப்பாலும் ஊக்குவிப்பாலும் தமிழ் நாட்டில் நடந்து வரும் பொது நூலகப் பணி மேலும் வளர்ந்து சிறந்த பணியை மக்களுக்கு ஆற்றி வர இருக்கின்றது.

நன்றி: பொது நூலக இயக்ககம்.

தமிழ் நாட்டில் பொது நூலகப்பணி 1983-84.

அடிப்படைத் தகவல்.

1) (அ) தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை (1981) - 4,82,97,456
   (ஆ) தமிழ்நாட்டின் படித்த மக்கள் தொகை (1981) - 2,21,11,593

2) (அ) தமிழ்நாடு அரசின் மொத்தச் செலவு ரூ. 11,30,09,68,000
   (ஆ) ஆளொன்றுக்குச் செலவு ரூ. 233,99

3) (அ) கல்விக்குச் செலவு ரூ. 38.71 16,000
   (ஆ) ஆளொன்றுக்குச் செலவு ரூ. 8.02
   (இ) எழுத்தறிவு பெற்ற ஆளொன்றுக்குச் செலவு ரூ. 17·51

4) (அ) நூலகங்களுக்குச் செய்த செலவு ரூ. 4,23,75,000
   (ஆ) ஆளொன்றுக்கு செய்த செலவு ரூ. 0.88
   (இ) எழுத்தறிவுபெற்றஆளொன்றுக்குச்செலவு ரூ. 1 92
   (ஈ) வாசகர் ஒருவருக்குச் செலவு ரூ. 1 37
   (உ) உறுப்பினர் ஒருவருக்குச் செலவு ரூ. 38.4



வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்சிப் பலகல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

— பாரதியார்

தமிழ் நாட்டின் பொது நூலகங்களின் பயன்பாடு 1983-84

வ. எண்	மாவட்டம்	நூலகங்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்	நூலிருப்பு	பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை	நூலகத்தில் பயன்படுத்தப்பட்ட நூல்கள்	உறுப்பினர்களின் எண்ணிக்கை	நூல் வழங்கல்	நூல்களின் மொத்தப் பயன்பாடு
1.	கன்னிமாராபொது நூலகம், சென்னை	1	114	374860	290315	870945	22614	151207	1022152
2.	செங்கல்பட்டு	119	252	900195	2656911	1278066	86417	903324	2181390
3.	கோயம்புத்தூர்	102	204	786882	2341962	269786	101735	944008	1213794
4.	தர்மபுரி	37	99	167174	750868	94181	26527	165852	260033
5.	சென்னை	124	248	1516838	2022930	1568479	70832	534161	2102640
6.	மதுரை	162	387	1101171	3510801	982735	108419	1276899	2259634
7.	நீலகிரி	38	89	212423	664017	109026	36579	244855	353881
8.	வட ஆற்காடு	90	188	501018	2630488	851455	66286	585516	1436971
9.	பெரியார்	100	318	667662	1521672	34025	60693	644807	678832
10.	புதுக்கோட்டை	26	51	122729	545508	173575	15208	122676	296251
11.	இராமநாதபுரம்	177	284	620309	2656358	457845	95567	652151	1109996
12.	சேலம்	84	225	556120	2185792	500383	127936	861580	1361963
13.	தென் ஆற்காடு	115	219	415500	1607829	167808	58865	354678	522486
14.	தஞ்சாவூர்	102	244	648941	2922324	1054896	89854	1457586	2512482
15.	திருச்சி	93	337	569766	2107857	389290	51539	514003	903293
16	திருநெல்வேலி	129	264	586197	2553103	319960	81926	1093995	1413955
17	கன்னியாகுமரி	2	22	13377	55114	10370	1033	16543	26913
	மொத்தம்	1501	3545	9761162	31023849	9132825	1102030	10523841	19656666

Best reading for the greatest Number at the least cost.

Five Laws of Library Science

1. Books are for use
2. Every Reader his book
3. Every Book its Reader
4. Save time of the Reader
5. Library is a growing organism

145345
-600 008.

குறைந்த செலவில் நிறைந்த மக்களுக்கு சிறந்த படிப்பு.

நூலகப் பஞ்சசீலம்

021.21191'N85
N85

1. நூல்கள் படிப்பதற்கே
2. ஆளுக்கொரு நூல்
3. நூலுக்குஓர் ஆள்
4. காலம் கருதுக
5. நூலகம் வளரும்

நூலகத்தில் சிறுவர்கள் படிக்கும் காட்சி

ராஜா பிரஸ், தாராபுரம்.

5A
9-3